**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 18 /2017**
**U/s. 151CRPC,7(1)(a) CLA Act**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : ஞானவேல் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**5** வது வேறொரு வழககில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்**.2** வது எதிரி ஆஜர்**. (4** வது எதிரி **Split up CC 263/2025** ல் உள்ளார்**.)( 1,7,6,3** எதிரிகள் இறந்து விட்டனர்**.)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 18/2017 04.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.40 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

1, நான் தஞ்சை நகர கிழக்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளாராக பணியில் இருந்து 31.07.2019 அன்று ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 1.12.2015 ம் தேதி போலீஸ் பார்டி சகிதம் நானும், உதவி ஆய்வாளர் திரு. செல்வமணி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. ராஜ்குமார் மற்றும் திரு. கஸ்தூரி அப்பா, திரு. ஜான் கென்னடி அவர்கள் சகிதம் காவல்நிலைய சரகத்தில் ரோந்து செய்து வந்தபோது காவல் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் அருண் என்ற அருண்குமார் , ராஜா என்ற பிரியாணி ராஜா இவர்களின் நண்பன் வெங்கடேசன் என்பவரை அடித்து கொலை செய்யுங்கடா நம்ம பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கீழவாசல் ஆட்டுமந்தை தெருவிலிருககும் விசிறிகாரத்தெருவில் இருக்கும் பிரிவு ரோடு அருகே அவர்களுடன் மற்றும் பலர் இருப்பதாக கிடைத்த தகவலின் படி மாலை 16.30 மணிக்கு மேற்படி சம்பவம் சென்று பார்க்க அங்கு வழக்கு குற்றவாளிகள் அருண் என்ற அருண்குமார், ராஜா என்ற பிரியாணி ராஜா, கொழுக்கட்டை தினேஷ், விக்கி என்ற விக்னேஷ், சத்தியராஜ் , முருகன், சிட்டி மணி என்ற தமிழ்செல்வன், முகமது ஆகியோர்களை ஆய்வாளர் விசாரணை செய்கையில் அவர்கள் தங்கள் நண்பரான வெங்கடேசன் என்பவரை அடித்து கொலை செய்தவங்களின் உறவினர்களை பயமுறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியிருந்தவர்களை போலீஸ் சட்டம் 30(2) அமலில் உள்ளது என்றும், அந்த இடத்தை விட்டு போகுமாறு சொல்லியும் கலைந்து போகாமல் , குற்றம் செய்யும் எண்ணத்துடன் இருந்தவர்களை 17.00 மணிக்கு காரணம் கூறி ஆய்வாளர் கைது செய்து , எதிரிகளை 18.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய

குற்ற எண் 488/2015 சட்டபிரிவுகள் 151 CRPC and 7(1)(a) CLA Act ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக ஆய்வாளருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம். வழக்கு சம்பவத்தின்போது எதிரிகளை எனக்கு தெரியும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. இந்த வழக்கில் பிரிவு 30(2) அமலில் உள்ளது என்பதை ஒலிபெருக்கி மூலம் தகவல் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதுபோல் இந்த வழக்கில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விசிறிகார தெரு வீடுகள் நிறைந்த பகுதி என்று சொன்னால் சரிதான். நான் ஆய்வாளர் விசாரணையின்போது எதிரிகள் எந்த திசையிலிருந்து வந்தார்கள் என்றோ நாங்கள் எந்த திசையிலிருந்து வந்தோம் என்றோ சொன்னேனா என்றால் இல்லை. வெங்கடேசன் என்பவரை கொலை செய்த உறவினர்களை பயமுறத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியிருந்தவர்களை கலைந்து போக சொன்னதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும், அந்த உறவினர் யார் என்று நானோ அல்லது ஆய்வாளரோ விசாரித்தோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவயிடம் சென்றபோது எதிரிகள் எங்களை தாக்க முற்படவில்லை என்றாலும், நாங்களும் எதிரிகளை தாக்கவில்லை என்றால் சரிதான்.

2.நான் சொன்ன நாள் , நேரத்தில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும் மேற்படி சட்டபிரிவு இவ்வழக்கிற்கு பொருந்ததாது என்று சொனனால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் தஞ்சை நகர எல்லைக்குள் இதுபோன்று வழக்குகள் போடப்பட்டன என்றால் சரிதான். விசாரணைக்காக எதிரிகளை அழைத்து சென்று மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் காவல்நிலைய புள்ளி விவர அறிக்கைக்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆய்வாளர் அவர்களால் போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.